



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில்
வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

| |
|---|
| வெள்ளிக்கிழமை ரபியுல் ஆகிர் பிறை 26 ஹிஜ்ரி 1437<br>Friday of Rabiyul Akhir 26th Hijri 1437<br>5th February 2016 |

| | |
|---|---|
| தலைப்பு: | நாகரிகம் நிறைந்த சமூக நல்லிணக்கம்! |

| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |

| |
|---|
| *இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.* |

| தலைப்பு: | நாகரிகம் நிறைந்த சமூக நல்லிணக்கம்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். அழகிய முறையில் தொடர்புகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று இறைவன் அறிவுறுத்துகிறான். நியாயமான முறையில் கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டும் என்கிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(16:128)

إِنَّ اللَّهَ مَعَ الَّذِينَ اتَّقَوْا وَالَّذِينَ هُمْ مُحْسِنُونَ

“நிச்சயமாக எவர்கள் மெய்யாகவே இறை அச்சமுடையவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுடனும், எவர்கள் நன்மை செய்கின்றார்களோ அவர்களுடனும்தான் அல்லாஹ் இருக்கின்றான்”

**முஸ்லிம்களே**! எல்லாம் வல்ல ஏக இறைவன் இந்த மனித குலத்தை ஓர் ஆத்மாவிலிருந்தே படைத்தான். பின்னர் இந்த மனிதர்களை பல்வேறு கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கிவைத்தான். அதன் மூலம் அவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு அறிமுகமாகிகொள்ள முடியும். ஒருவருக்கொருவர் உதவி செய்து, இணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக இந்த முறையை இறைவன் ஏற்படுத்தி வைத்துள்ளான்: (49:13)

يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَأُنْثَى وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ لِتَعَارَفُوا إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللَّهِ أَتْقَاكُمْ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ

“மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர், ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால், உங்களில் ஒருவர் மற்றவரைவிட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை.) எனினும், உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ, அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் (அனைத்தையும்) நன்கறிந்தவனும் நன்கு தெரிந்தவனாகவும் இருக்கின்றான்”

இவ்வாறு தனித்தனி குழுக்களாக அறியப்பட்டாலும் அவர்கள் அனைவரிடமும் நல்ல விதமாக பழக வேண்டும், அழகிய வார்த்தைகளை பேச வேண்டும், வியாபார ஒப்பந்தங்களில் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும், நடுநிலையான அணுகுமுறையோடு மென்மையான போக்கையே கடைபிடிக்க வேண்டும் நமது இஸ்லாமிய மார்க்கம் வலியுறுத்துகிறது. இறைவன் தனது திருமறையில் கூறுகிறான்: (41:34)

ادْفَعْ بِالَّتِي هِيَ أَحْسَنُ فَإِذَا الَّذِي بَيْنَكَ وَبَيْنَهُ عَدَاوَةٌ كَأَنَّهُ وَلِيٌّ حَمِيمٌ* وَمَا يُلَقَّاهَا إِلاَّ الَّذِينَ صَبَرُوا وَمَا يُلَقَّاهَا إِلاَّ ذُو حَظٍّ عَظِيمٍ

“நன்மையும் தீமையும் சமமாகிவிடாது. (ஆதலால், நபியே! தீமையை) நீங்கள் மிக அழகியதைக் கொண்டு தடுத்துக் கொள்ளுங்கள். அவ்வாறாயின், உங்களுடைய கொடிய எதிரியை அதே சமயத்தில் உங்களுடைய உண்மையான, மிக்க நெருங்கிய நண்பனைப் போல் காண்பீர்கள். 41:35. பொறுமையுடையவர்களைத் தவிர மற்றெவரும் இதனை அடைய மாட்டார்கள். அன்றி, பெரும் பாக்கியமுடையவர்களைத் தவிர மற்றெவரும் இதனை அடையமாட்டார்கள்”

மேலும் இறைவன் கூறுகிறான்: (2:83)

وَقُولُوا لِلنَّاسِ حُسْنًا

“அனைத்து மனிதர்களிடமும் அழகாகப் பேசுங்கள் (அழகிய வார்த்தை சொல்லுங்கள்)”

“மனிதர்கள்” என்கிற சொல் பொதுவானது, பல்வேறு வகையான மதம், மொழி, இனம், நாடு, நிறம், ஆகியவற்றால் பிரிந்திருந்தாலும் ஒவ்வொருவரும், “மனிதர்கள்” என்கிற அந்த சொல்லில் அடங்குவார்கள். நமது நீதமான ஷரீஅத்தின் உயரிய அறிவுரைப்படி ஒவ்வொரு குழுவினரோடும், பிரிவினரோடும், சமுதாயத்தாரோடும், இணக்கமாக வாழ வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறோம்.

இது வாழ்வின் உயரிய இலக்குகளை அடைவதற்கான வழியாகும். உன்னதமான நற்குணங்களின் அடையாளமாகும். சிறந்த சமூக கலாச்சார தொடர்புகளுக்கு வழிவகுக்கும்.

இதன் மூலம் நல்லிணக்கம், அன்பு, உண்மை, நேர்மை, கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது, நம்பகத்தன்மையை காப்பது, சகிப்புத்தன்மை, அரவணைப்பு சிந்தனை, மென்மையான போக்கு, எளிமையான அணுகுமுறை, சமூக சேவை, நல்லறம் போன்றவற்றை பெற முடியும் என்று நம் ஷரீஅத் அறிவுறுத்துகிறது. இத்தகைய குணங்கள் ஒவ்வொரு முஸ்லிமுக்கு இருக்க வேண்டும். ஒவ்வொரு சமுதாயத்தின் அடித்தளமாக இவை அமைந்திருக்க வேண்டும். எந்த வகையிலும் வேற்றுமை கொள்ளாமல் மனிதர்கள் அனைவரிடமும் நியாயமான முறையில் நடந்து கொள்ள வேண்டும். மாற்றார்களோடு பழகும்போது மிகவும் நடுநிலையாகவும், நேர்மையாகவும் நடக்க வேண்டும் என்று இறைவன் தனது திருமறையில் வலியுறுத்துகிறான்: (60:8)

لَا يَنْهَاكُمُ اللَّهُ عَنِ الَّذِينَ لَمْ يُقَاتِلُوكُمْ فِي الدِّينِ وَلَمْ يُخْرِجُوكُمْ مِنْ دِيَارِكُمْ أَنْ تَبَرُّوهُمْ وَتُقْسِطُوا إِلَيْهِمْ إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُقْسِطِينَ

“(நம்பிக்கையாளர்களே!) மார்க்க விஷயத்தில் உங்களுடன் எதிர்த்து போர் புரியாதவர்களுக்கும், உங்கள் இல்லத்திலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும், நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுடன் நீங்கள் நீதமாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதிவான்களை நேசிப்பவனாகவே இருக்கின்றான்”

இந்த வசனத்திற்கு உலமாக்கள் பின்வருமாறு விளக்கம் தருகிறார்கள்: முஸ்லிம் அல்லாதவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதின் பொருள், முஸ்லிம் அல்லாதவர் பலகீனமானவராக இருந்தால் அவரிடம் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும், அவர் ஏழ்மையில் இருந்தால் கொடுத்து உதவ வேண்டும், அவர் பசியோடு இருந்தால் உணவளிக்க வேண்டும், அவர் உடுத்த ஆடை இல்லாமல் இருந்தால் உடைகள் வழங்க வேண்டும், அவர்களிடம் மென்மையாகவும், மிருதுவாகவும், அன்பாகவும் பேச வேண்டும். அவர்களும் நேர்வழி பெற்று வாழ்வில் ஏற்றம் பெற அவர்களுக்காக துஆச் செய்ய வேண்டும். அவர்களுடைய உயிர், உடைமைகள் மற்றும் சொத்துகளுக்கு நாம் பாதுகாப்பு வழங்க வேண்டும். அவர்களின் தனி உரிமைகளை நிலைநாட்ட வேண்டும், வேண்டிய அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும், அவர்களுக்கு எதிரான அக்கிரமங்களையும், அநியாயங்களையும் தட்டிக் கேட்டு தடுத்து நிறுத்த வேண்டும். எந்த தடங்கலுமின்றி அவர்களின் உரிமைகளை அவர்களுக்கு வழங்க வேண்டும். ((15/3) : الفروق للقرافي)

எந்த சூழ்நிலையிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அவர்கள் இஸ்லாத்தில் நுழைந்து விட வேண்டும் என்கிற நெருக்கடி நிலையை உருவாக்க கூடாது. எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (2:256)

لَا إِكْرَاهَ فِي الدِّينِ

“(இஸ்லாம்) மார்க்கத்தில் நிர்ப்பந்தமேயில்லை”

அதாவது இஸ்லாமிய மார்க்கத்தை கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று யாரையும் நிர்பந்திக்க கூடாது. இது மிகவும் தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இது இஸ்லாமிய



www.sunnathwaljamath.com

நெறியின் அடையாளமாகும், அறிவார்ந்த அணுகுமுறையாகும். ஒருவரை கட்டாயப்படுத்தி இஸ்லாத்திற்குள் நுழைக்க வேண்டிய அவசியம் இந்த மார்க்கத்திற்கு இல்லை. ((682/1) : تفسير ابن كثير)

எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (109:6)

لَكُمْ دِينُكُمْ وَلِيَ دِينِ

“உங்களுக்கு உங்களுடைய மார்க்கம்; எனக்கு என்னுடைய மார்க்கம்.”

நாகரிகமான முறையில் சமூக நல்லிணக்கத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு மற்றவர்களின் நம்பிக்கையை இழிவுபடுத்துவதையும், விமர்சனம் செய்யவதையும் இஸ்லாமிய வன்மையாக கண்டித்து தடுக்கிறது. பரிசுத்த நாயகனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (6:108)

وَلاَ تَسُبُّوا الَّذِينَ يَدْعُونَ مِنْ دُونِ اللَّهِ فَيَسُبُّوا اللَّهَ عَدْوًا بِغَيْرِ عِلْمٍ

“(நம்பிக்கையாளர்களே!) அல்லாஹ் அல்லாத எவற்றை அவர்கள் (இறைவன் என) அழைக்கின்றார்களோ அவற்றை நீங்கள் திட்டாதீர்கள். அதனால் அவர்கள் அறியாமையின் காரணமாக வரம்பு மீறி அல்லாஹ்வை திட்டுவார்கள்”

இவ்வாறு அவர்களின் நம்பிக்கையை கிண்டல் செய்து இழிவுபடுத்தினால் அவர்களின் வெறுப்பிற்கும், காழ்புணர்ச்சிக்கும் ஆளாக நேரிடும். பகையுணர்வு வளரும், கலவர பீதி உருவாகும், தேவையற்ற வாக்குவாதங்களும், சச்சரவுகளும் பெருகும். இன்றைய கால சூழலில் அனைத்து சமுதாயமும் ஒருவருக்கொருவர் நட்பு பாராட்டி நாகரீகமான முறையில் சமூக நல்லிணக்கத்தை வளர்க்க வேண்டும். பரஸ்பரமாக கருத்துகளை பரிமாறிக்கொள்ள வேண்டும், அவர்களின் நட்பை மிகவும் வலுவாக அமைத்துக்கொள்ள வேண்டும். நாடுகளுக்கிடையில் உள்ள சிறந்த நட்புறவு, பரஸ்பர சந்திப்புகள், மரியாதையான கட்டுக்கோப்புகள், சமசீரான ஒப்பந்தங்கள், போன்றவற்றிற்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது. எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (2:177)

وَالْمُوفُونَ بِعَهْدِهِمْ إِذَا عَاهَدُوا

“வாக்குறுதி செய்த சமயத்தில் தங்களுடைய வாக்குறுதியை(ச் சரிவர) நிறைவேற்றுபவர்களும்; இறை அச்சமுடையவர்கள்தான்”

**தொழுகையாளிகளே!** காலத்திற்கேற்ப நாகரீகம் நிறைந்த சமூக நல்லிணக்கத்தின் கோட்பாடுகளை முஸ்லிம்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே நல்லிணக்கத்திற்கும், சகிப்புத்தன்மைக்கும், அரவணைப்பிற்கும் சிறந்த முன்னோடியாக திகழ வேண்டும். அனைத்து மனிதர்களிடமும் அழகிய முறையில் பழக வேண்டும். இதன் மூலம் மற்ற சமுதாயத்தாரிடம் மாபெரும் மாற்றத்தை உருவாக்கும், அதன் பிறகு அவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் இணைவார்கள்.

நாகரீகமான சமுதாய நல்லிணக்கம் பல்வேறு வகைப்படும். அவற்றில் ஒன்று முஸ்லிமாக இல்லாத போதும் சொந்த உறவுகளோடு இணக்கமாக இருக்க வேண்டும். இறைவன் தன்னுடைய வேதத்தில் கூறுகிறான்: (31:15)

وَإِنْ جَاهَدَاكَ عَلى أَنْ تُشْرِكَ بِي مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ فَلَا تُطِعْهُمَا وَصَاحِبْهُمَا فِي الدُّنْيَا مَعْرُوفًا

“எனினும், (இறைவன் என்று) நீ அறிந்துகொள்ளாத யாதொரு பொருளை எனக்கு இணை வைக்கும்படி அவர்கள் உன்னை நிர்ப்பந்தித்தால் (அவ் விஷயத்தில்) நீ அவர்களுக்கு வழிப்பட வேண்டாம். ஆயினும், இவ்வுலக விஷயத்தில் நீ அவர்களுக்கு (நீதமாக) உதவி செய்து (அன்பாக) நேசித்துவா”

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் குறைஷிகள் ஒப்பந்தம் செய்திருந்த (ஹுதைபிய்யா உடன் படிக்கையின்) காலகட்டத்தில் என் தாயார் இணைவைப்பவராகவே இருந்தார். அவர்கள் ஒருமுறை என்னிடம் வந்திருந்தார்கள். எனவே, நான் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் மார்க்கத் தீர்ப்புக் கோரியவளாக, “இறைத்தூதர் அவர்களே! என் தாயார் என்னிடம் ஆசையோடு வந்திருக்கிறார். நான் அவரின் உறவைப் பேணி நடந்து கொள்ளலாமா?” என்று கேட்டேன். அதற்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “அவரின் உறவைப் பேணி நடந்து கொள்" என்று கூறினார்கள்.( متفق عليه)

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிமல்லாத மக்களிடமும் வியாபாரங்கள் செய்துள்ளார்கள். கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபட்டுள்ளார்கள். எந்த சூழ்நிலையிலும் யாரையும் ஏமாற்றவோ, நம்பிக்கை துரோகம் செய்யவோ, அநியாயம் செய்யவோ மாட்டார்கள். யாருடைய பொருளையும் அபகரிக்கவும் மாட்டார்கள். இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த மாற்று சமுதாய மக்களுக்கு உரிய பாதுகாப்பும், உரிமைகளையும் வழங்கினார்கள். நஜ்ரான் வாசிகளை பற்றி பின்வருமாறு அவர்கள் கூறியுள்ளார்கள்:

وَلِنَجْرَانَ وَحَاشِيَتِهَا جِوَارُ اللَّهِ وَذِمَّةُ مُحَمَّدٍ النَّبِيِّ، عَلَى أَنْفُسِهِمْ وَمِلَّتِهِمْ وَأَرْضِيهِمْ وَأَمْوَالِهِمْ، وَغَائِبِهِمْ وَشَاهِدِهِمْ، وَعَشِيرَتِهِمْ وَبِيَعِهِمْ

“நஜ்ரான்வாசிகளும், அவர்களை சுற்றி உள்ளவர்களும் அல்லாஹ்வுடைய அண்டை வீட்டார்கள். மேலும் அவர்கள் முஹம்மது நபியின் பாதுகாப்பில் இருக்கிறார்கள். அவர்களுடைய உயிரும், நிலங்களும், சொத்துகளும், கண்ணெதிரில் உள்ளவர்களும், வெளியே சென்றதால் கண்ணெதிரில் இல்லாதவர்களும், அவர்களுடைய தோழமைகளும், அவர்களுடைய வணிகமும் முஹம்மது நபியின் பாதுகாப்பில் இருக்கின்றன”(389/5 دلائل النبوة للبيهقي)

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த மக்களுடைய உரிமைகளை பாதுகாத்தார்கள். அவர்களுடைய சொத்துகளுக்கு பாதுகாப்பு வழங்கினார்கள், அவர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளித்துள்ளார்கள். மாற்று சமுதாய மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று பின்வருமாறு எச்சரிக்கிறார்கள்:

مَنْ قَتَلَ نَفْسًا مُعَاهَدًا لَمْ يَرِحْ رَائِحَةَ الْجَنَّةِ، وَإِنَّ رِيحَهَا لَيُوجَدُ مِنْ مَسِيرَةِ أَرْبَعِينَ عَامًا

"(இஸ்லாமிய அரசுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு அதன் கீழ் வாழ்ந்துவரும்) ஓர் ஒப்பந்தக் குடிமகனை (அநியாயமாக)க் கொலை செய்பவன் சொர்க்கத்தின் வாடையைக்கூட நுகர மாட்டான். சொர்க்கத்தின் நறுமணமோ நாற்பதாண்டுப் பயணத் தொலைவிலிருந்தே வீசிக் கொண்டிருக்கும்"(6914 : البخاري )

எனவே அவர்களிடம் நேர்மையாக நடந்து கொள்ளவேண்டும். அவர்களுக்கு அநியாயம் செய்வது வன்மையாக தடுக்கப்பட்டுள்ளது. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

أَلاَ مَنْ ظَلَمَ مُعَاهِدًا أَوِ انْتَقَصَهُ أَوْ كَلَّفَهُ فَوْقَ طَاقَتِهِ، أَوْ أَخَذَ مِنْهُ شَيْئًا بِغَيْرِ طِيبِ نَفْسٍ فَأَنَا حَجِيجُهُ يَوْمَ الْقِيَامَةِ

"மிக கவனமாக இருங்கள், யாரவது ஒருவன் பிறமதத்தை சார்ந்தவருக்கு அநியாயம் செய்தால், அல்லது அவருக்கு குறைத்துக் கொடுத்தால், அல்லது அவருடைய சக்திக்கு மீறி அவரிடம் வேலை வாங்கினால, அல்லது அவருடைய அனுமதி இல்லாமல் அவருடைய பொருளை எடுத்துக் கொண்டால் அவனுக்கு எதிராக (மாற்று மத சகோதரனுக்கு ஆதரவாக) நாளை மறுமை நாளில் நானே வாதிடுவேன்" (3054 : أبو داود)

அல்லாமா அல்கராபி அல்மாலிகி கூறுகிறார்கள்: மாற்று சமுதாய மக்களிடம் தவறான வார்த்தையை பேசுவது, அல்லது அவர்களில் யாரைப் பற்றியும் புறமுதுகுக்கு பின்னால் புறம் பேசுவது, அல்லது ஏதேனும் வகையில் தொல்லை கொடுப்பது அல்லது அப்படி தொல்லை கொடுப்பதற்கு மறைமுகமாக உதவுவது, போன்ற வகையில் யார் மாற்று சமுதாய மக்களிடம் எல்லை மீறுகிறாரோ நிச்சயம் அவர் அல்லாஹ்வும், அவனுடைய தூதர் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், இஸ்லாமும் வழங்கிய பாதுகாப்பை சீர்குலைத்துவிட்டார். ((14/3) : الفروق)

**முஸ்லிம்களே**! நாகரீகமான முறையில் நல்லிணக்கத்தை வளர்ப்பதால் எண்ணற்ற பல நன்மைகள் விளையும். உயிர்கள் பாதுகாப்பு பெறும். உரிமைகள் நிலைநாட்டப்படும், அமைதியும், அன்பும் தழைத்தோங்கும், அனைவருக்கும் மிக நிம்மதியான அமைதியான வாழ்க்கைச் சூழல் அமையும், உயர்தரமான வாழ்க்கை தரத்திற்கு வழிவகுக்கும், அழிவை ஏற்படுத்தும் ஒவ்வொரு காரணியும் தடைபடும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

الْمُسْلِمُ مَنْ سَلِمَ النَّاسُ مِنْ لِسَانِهِ وَيَدِهِ، وَالْمُؤْمِنُ مَنْ أَمِنَهُ النَّاسُ عَلَى دِمَائِهِمْ وَأَمْوَالِهِمْ

“ஒரு முஸ்லிம் (யாரெனில்) அவரின் நாவாலும் கரத்தாலும் மற்ற மக்கள் மிக நிம்மதியாக இருக்க வேண்டும். முஃமீன் (இறைநம்பிக்கையாளன் யாரெனில்) மற்ற மக்கள் தங்கள் உயிருக்கும், சொத்துகளுக்கும் அவரிடமிருந்து பாதுகாப்பு பெற்றிருக்க வேண்டும். ( الترمذي: 2627 والنسائي: 4995 واللفظ له)

நம்முடைய ஐக்கிய அரபு அமீரக அரசு இத்தகைய நாகரீகமான சமூக நல்லிணக்கத்திற்கு முன்னுதாரணமாக திகழ்கிறது. நேர்மைக்கும், விட்டுக்கொடுக்கும் தன்மைக்கும், அரவணைப்பிற்கும் வழிகாட்டியாக இருக்கிறது. இதனால்தான் இந்த தேசத்தில் அனைத்து நாட்டு குடிமக்களும், பல்வேறு வகையான மதத்தை சார்ந்தவர்களும் வசிக்கிறார்கள். என்றபோதிலும் அவர்களுக்குரிய உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது, அவர்களின் பொருளாதார பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக நம் அரசு இருக்கிறது.

அவர்களின் மத நம்பிக்கைகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த மக்களும் உண்மையாக உழைக்கிறார்கள். இந்த தேசத்தை கட்டமைப்பதில் தங்கள் பணியை சீராக செய்து முடிக்கிறார்கள். மற்ற சமூகத்தாருடன் இணக்கமாக வாழ்கிறார்கள். இந்த தேசத்தின் அமைதியும் செழிப்பும் தழைத்தொங்குவதற்கு பெரிதும் துணை புரிகிறார்கள். எனவே இந்த ஐக்கிய அரபு அமீரக அரசு மிகவும் நிலையான நிம்மதியான அரசாட்சி புரிகிறது.

யா அல்லாஹ் எங்களுக்கு நிலையான மற்றும் நிம்மதியான வாழ்வை தருவாயாக!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது. இன்றைய காலத்தில் இணையதள சேவை அபாரமான வளர்ச்சியை பெற்றிருக்கிறது. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சிறந்த வாய்ப்புகளை உருவாக்கி தருகிறது. பலனுள்ள தகவல்களை பரப்பலாம், அறிவார்ந்த கருத்துக்களை பகிரலாம், பண்பாடுகளையும், கலாச்சார நெறிமுறைகளையும் எடுத்துக்கூற முடியும். தொடர்புகளையும், நெருக்கங்களையும் அதிகப்படுத்திக் கொள்ள முடியும்.

மாறுபட்ட கருத்துகளை ஆரோக்கியமான முறையில் பரிமாறிக்கொள்ள முடியும். இந்த சேவையை பயன்படுத்துவதில் எண்ணற்ற முன்னேற்றங்கள் கிடைக்கும். அதேசமயம் இவ்வாறான சமூக தளங்களை பயன்படுத்துவதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எனவே மாறுபட்ட கருத்துகளை விமர்சிக்கும்போது கண்ணியக்குறைவான வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது. உணர்ச்சி மிகுதியால் கட்டுப்பாடை இழந்து விடக்கூடாது. இத்தகைய நேரங்களில் கலவர சிந்தனையையும், காழ்ப்புணர்ச்சியையும் அறவே ஒழித்து விட வேண்டும். யாருடைய மனதையும் புண்படுத்தாத வண்ணம் சமூக தளங்களில் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும். பின்வரும் இறைவசனங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்: (17:53)

وَقُلْ لِعِبَادِي يَقُولُوا الَّتِي هِيَ أَحْسَنُ إِنَّ الشَّيْطَانَ يَنْزَغُ بَيْنَهُمْ إِنَّ الشَّيْطَانَ كَانَ لِلإِنْسَانِ عَدُوًّا مُّبِينًا



www.sunnathwaljamath.com

"(நபியே! எனக்கு கட்டுப்பட்ட) என்னுடைய அடியார்களுக்கு நீங்கள் கூறுங்கள்: அவர்கள் (எந்த மனிதருடன் பேசியபோதிலும்) எது மிக அழகியதோ அதையே கூறவும். நிச்சயமாக ஷைத்தான் அவர்களுக்கிடையில் (கெட்ட வார்த்தைகளைக் கூறும்படி செய்து) கெடுதலே செய்வான். (ஏனென்றால்,) நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்கமான எதிரியாக இருக்கிறான். (ஆகவே, எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்.)"

இத்தகைய சாதனங்களில் இவ்வாறு நாம் கண்ணியமாக நடந்து கொள்ளும்போது நமது வாழ்விற்கும், மார்க்கத்திற்கும், சமுதாயத்திற்கும், தேசத்திற்கும் உயரிய கௌரவம் கிடைக்கும். இவற்றில் கிடைக்கும் பலன்களை அனுபவிக்கலாம், இவற்றினால் ஏற்படும் பாதிப்புகளில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவ்வாறான பாதிப்புகளில் இருந்து ஒரு குடும்ப தலைவர் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களை மிகவும் எச்சரிக்கையோடு கண்காணித்து பாதுகாக்க வேண்டும். மிகக் குறிப்பாக இத்தகைய தளங்களில் சந்தேகத்திற்குரிய சமூக விரோத கருத்துகளும், தீவிரவாத சிந்தனைகளும் பரப்பபடுகிறது. இதனால் நமது நீதமான மார்க்கத்திற்கும் அவப்பெயர் ஏற்படுகிறது. சர்ச்சைகளும், குழப்பங்களும் பெருகுகிறது. இறைவன் தனது திருமறையில் கூறுகிறான்: (7:142)

وَلاَ تَتَّبِعْ سَبِيلَ الْمُفْسِدِينَ

"விஷமிகளுடைய வழியை நீங்கள் பின்பற்றாதீர்கள்"

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும்

ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்க்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள்

தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!



www.sunnathwaljamath.com

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).